2019 பிப்ரவர் 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவியாக தலா 2,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், கிராமப்புறத்தில் வாழும் சுமார் 35 இலட்சம் ஏழைக் குடும்பங்களும், நகர்ப்புறத்தில் வாழும் சுமார் 25 இலட்சம் ஏழைக் குடும்பங்களும் ஆக மொத்தம், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சுமார் 60 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் தலா 2,000 ரூபாய் சிறப்பு நிதியுதவியைப் பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 1,200 கோடி ரூபாய் 2018-2019 ஆம் ஆண்டு (மேசையைத் தட்டும் ஒலி) துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்பு

"காகிதமில்லா சட்டமன்றம்" எனும் இலக்கினை எய்திடும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்— விடைகள் பட்டியலில் சில விவரங்கள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சலில் அனுப்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் நிலையினை உருவாக்க, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 2019 ஆம் ஆண்டிற்கான உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகளின் 8-வது பட்டியலுக்கான (1 முதல் 100 வரை) வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம்-software copy PDF வடிவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளன. இதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறாது என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உடுக்குறியிடாத

வினாக்கள்-விடைகளின் நகல்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும் என்பதையும், மேலே கூறப்பட்டுள்ள இப்பட்டியலின் 2 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

***முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘வாரிசு அரசியல்வாதிகளை’ பலர் விமர்சிக்கும் இன்றைய சூழ்நிலையில், இந்த அவையில், என் தாத்தா தமிழவேள் திரு. பி.டி. ராஜன் அவர்கள் 99 வருடங்களுக்கு முன் கன்னி உரையாற்றிய அவையில், என் அப்பா பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் 52 வருடங்களுக்கு முன் உரையாற்றிய அவையில், இன்றைக்கு 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் உரையாற்றுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய எங்கள் கழகத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், தளபதியார் அவர்களுக்கும், கட்சிக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என் உரையைக் கேட்பதற்காக இங்கே இருக்கும் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

நான் இரண்டு முறை நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றிருக்கின்றேன். 2016-2017-ல் அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் முழுமையாக ஆங்கிலத்தில் புள்ளிவிவரங்களுடன் பேசினேன். 2017-2018-ல் பாதி தமிழில் பேசினேன். ஆனால், அதேமாதிரி ஒரு statistical basis-ல்-புள்ளிவிவரங்கள், வரைபடங்கள், பட்டியல்கள் அடிப்படையில் பேசினேன். இன்றைக்கு கொஞ்சம் மாறி, எந்தப் புள்ளிவிவரமும், எந்தக் கணக்கும் இல்லாமல் முடிந்த அளவுக்கு தமிழிலேயே வரலாறு, தத்துவம், பொருளாதாரம் என்ற